சித்திரசேனா மகாராஜாவிற்கு அவருடைய மலர் குவளைகள்னா ரொம்பவே புடிக்கும். **அவருடைய அரண்மனையில் நிறைய அழகான மலர் குவளைகளை சேகரித்து வைத்திருந்தார்.**
அதை எல்லாம் பாதுகாக்கவும், சுத்தம் செய்யவும் ஒரு இளைஞனை நியமித்தார். அதுமட்டுமல்ல அந்த குவளைகளுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால் அவனுக்கு தண்டனை கிடைக்கும் எனவும் சொல்லியிருந்தார்.

ஒரு நாள் அந்த இளைஞன் குவளைகளை துணியை வைத்து சுத்தம் செய்து
கொண்டிருக்கும்போது **திடீரென்று அவனது கை தவறி அந்த குவளை கீழே விழுந்து சுக்குநூறாக உடைந்து விட்டது.**



அந்த சத்தத்தைக் கேட்ட மகாராஜா உடனே அந்த இடத்திற்கு விரைந்து சென்றார். உடனே அவர் அந்த இளைஞனிடம், **“நீ என்ன பண்ணி வைத்திருக்கிறாய்? என்னுடைய விலை உயர்ந்த பொருளை இப்படி உடைத்துள்ளாய், இதற்கு கண்டிப்பாக உனக்கு**

**தண்டனை உண்டு, இவனை தூக்கில் இடுங்கள்”** என்று ஆவேசமாகக் கத்தினார்.
உடனே அந்த இளைஞன் மகாராஜாவிடம், **“தயவு செய்து என்னை மன்னித்துவிடுங்கள். என் கை தவறி தான் அந்த குவளை கீழே விழுந்தது”** என்று மன்னிப்பு கேட்டான். ஆனால் மகாராஜா அவன் பேச்சைக் கேட்கவே இல்லை.
அந்த இளைஞனிடம் மகாராஜா**, “உன்னுடைய கடைசி ஆசை என்னவென்று கூறு”** என்று கேட்டார். அதற்கு அந்த இளைஞன், **“மகாராஜா எனக்கு ஒரே ஒரு கோரிக்கை தான் உள்ளது நான் இறப்பதற்கு முன்பு இந்த கோட்டையில் உள்ள எல்லா குவளைகளையும் பார்க்க வேண்டும் என்று கேட்டார் மகாராஜாவும் தன் சிப்பாய்களிடம் உடனே எல்லாக் குவளைகளையும் கொண்டு வாங்கள்”** என்று கூறினார்.
சிப்பாய்கள் எல்லா குவளைகளையும் கொண்டுவந்தார்கள். மகாராஜா அந்த இளைஞனிடம்**, “எல்லா குவளைகளையும் நன்றாகப் பார் இனிமே உனக்கு இந்த வாய்ப்பு கிடைக்கப் போவதில்லை”** என்று கூறினார்.

Tamilbe



அந்த இளைஞன் எல்லாக் குவளைகளையும் எடுத்து கீழே போட்டு உடைத்து விட்டான்  கோபத்தில் மகாராஜா, “**இளைஞனே.. நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்**” என்று கேட்டார். அதற்கு அந்த இளைஞன், “**நான் இன்னொருவரின் உயிரை காப்பாற்றி உள்ளேன்**” என்று பதில் சொன்னான். மகாராஜா, “**என்ன கூறுகிறாய்?**” என்று கேட்டார். அவன் சொன்னான், “**எப்படியும் என்னை தூக்கில் இட்ட பிறகு இன்னொருவரை குவளைகளை பார்க்க ஏற்பாடு செய்வீர்கள், அப்போது அவன் கையில் இருந்து ஏதாவது ஒரு குவளை கீழே விழுந்து உடைந்தால், அவனை மீண்டும் தூக்கில் இட போகிறீர்கள்**” எனவே தான் “**நான் ஒருவரின் உயிரை காப்பாற்றி உள்ளேன் என்று கூறினேன்**” என்றான் அந்த இளைஞன்.
இதை கேட்டா மகாராஜா ஆச்சரியமடைந்து, **“உன்னுடைய பதில் எனக்கு மிகவும் பிடித்துள்ளது,**

**உன்னை நான் மன்னித்து விட்டேன் அது மட்டும் இல்லாமல்  என்னுடைய அரசவையில் உனக்கு ஒரு முக்கிய பதவியை கொடுக்க உள்ளேன்”** என்று கூறினார்.

நீதி : **கோபத்தில் எடுக்கும் எந்த முடிவும் தவறாகத்தான் இருக்கும்.**

TamilBooksPDF.Com